

வாலிபர் பகுதி

# இது ஒரு தொடர் ஓட்டம் (Relay Race)

சகோதரி. பிரேமாடேவிட்

(கட்டுகள், உபத்திரவங்கள்) அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன், என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன், என் ஓட்டத்தைச் சந்தோஷத் தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன். அப் 20:24

கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி தங்கைகளே. நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்ற அன்பு கட்டளையை நமக்குக் கொடுத்த, நம்மில் விசுவாசத்தை துவக்கினவரும் அதை முடிக்கிறவருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

நீங்கள் உங்களது School, College-ல் தொடர் ஓட்டம்(Relay Race) ஓடியிருக்கிறீங்களா? ஒரு Team-ல் 4 பேர் இருப்பார்கள். முதல் நபரிடம் கொடுக்கப்படும் ஒரு Stick-ஐ அவர் எடுத்துக் கொண்டு சிறிது தூரம் ஓடி, இரண்டாம் நபரிடம் கொடுக்க வேண்டும். இரண்டாம் நபர் மூன்றாம் நபரிடமும், மூன்றாம் நபர் நான்காம் நபரிடமும் கொடுக்க வேண்டும். அவரவர் களுக்குரிய ஓடு தளத்தில், குறிப்பிட்ட எல்லையை குறிப்பிட்ட நேரத்திற்குள் ஓடிச் சென்றடைய வேண்டும். இது போன்ற இரண்டு மூன்று Team-களிடையே நடக்கும் போட்டிகளில் யார் முதலாவது வருகிறார்களோ அந்த Team வெற்றி பெற்றதாக அறிவிக்கப் படும். இது போன்ற ஒரு சுவிசேஷ தொடர் ஓட்டம் எத்தனை பெரிய வெற்றியைக் கொடுத் துள்ளது. அதனால் நாம் கற்றுக் கொள்வது என்ன என்று பார்ப்போம்.

எட்வர்ட் கிம்பால் என்ற ஒரு ஞாயிறு பள்ளி ஆசிரியர், இயேசுவை அறியாத தன்னுடைய ஞாயிறு பள்ளி மாணவன் ஒருவன் கற்றுக் கொள்வதில் ஆர்வமில்லாமல் இருந்ததை நினைத்துக் கவலைப்பட்டவராய், அவன் வேலை பார்த்த ஷூ கடைக்கு அவனைத் தேடிச் சென்று சந்தித்தார். தம்பி உன்னோடு நான் தனியாக பேச வேண்டும் என்றார். அவனும் சரி என்றவுடன் கீழ்தளத்தில் உள்ள ஒரு அறைக்குச் சென்றார்கள். ஞாயிறு பள்ளி ஆசிரியர் கிம்பால் இந்த மாணவனைப் பார்த்துச் சொன்னார் இயேசு உன்னை எவ்வளவாய் நேசிக்கிறார் தெரியுமா? நீ அவரைக் குறித்து அறிந்து கொள்ள வேண்டும். அவர் உனக்கு தேவை என்று அவனிடம் பேசினவுடன், அங்கேயே அவன் இயேசுவை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டான். அவன் வருங்காலத்தில் உலகத்திலேயே புகழ்பெற்ற மிகப்பெரிய சுவிசேஷகராக வருவார் என்பது அவருக்குத் தெரியாது. ஆனால் அவனுக்கு இயேசுவைக் கூறிவிட்டால் பரலோகத்தை நோக்கிய பாதையில் வருவானே என்ற ஆத்மபாரம் தான் அவருக்கு இருந்தது.

17 வயதான அவன் யார் தெரியுமா? அவர் தான் D.L.மூடி. இந்தப் பெயரை கிறிஸ்தவர்கள் ஒரு தடவையாவது செய்திகளில் கேள்விப்பட்டிருப்பார்கள். அவர் 100 மில்லியன் மக்களிடம் சுவிசேஷத்தை அறிவித்துள்ளார். ஐரோப்பாவையும், அமெரிக்காவையும் அசைத்த ஒரு ஊழியக்காரராய் மாறினார். இந்தத் தொடர் ஓட்டம் முடிவதில்லை. D.L.மூடி இரட்சிப்பின் அருமையான திட்டத்தையும், அதை நாம் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் பற்றியும் ஓ.வில்பர் சாப்மென் என்பவருக்குத் தனிப்பட்ட ஆலோசனையாகக் கூறினார். அவரும் இயேசுவின் இரட்சிப்பைப் புரிந்து கொண்டு

அவரை ஏற்றுக் கொண்டார். இந்த வில்பர் சாப்மென் முன்னாள் பேஸ்பால் விளையாட்டு வீரர்.

பில்லிசன்டே என்பவருக்கு இயேசுவின் சத்தியமே நம்மை விடுதலையாக்கும் என்பதை விளக்கினவுடன். அவர் இயேசுவை தனது இரட்சகராக ஏற்றுக் கொண்டார். இந்த பில்லிசன்டே தான் நடத்தும் சுவிசேஷ கூட்டத்துக்கு மொர்தேக்காய் ஹாம் என்பவரை அழைத்திருந்தார். இவரும் ஆண்டவரை ஏற்றுக் கொண்டு வல்லமையான ஊழியக்காரனாய் மாறினார். இந்த மொர்தேக்காய் ஹாம் பிரசங்கித்த ஒரு பெரிய சுவிசேஷகக் கூட்டத்தின் கடைசி நாளில். இறுதியாக இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் மேடைக்கு முன்பு வரும்படி அழைப்பு கொடுக்கப்-பட்டது. அன்று அநேகர் முன்பாக வந்து இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

அந்தக் கூட்டத்தில் 16 வயது இளைஞன் ஒருவனும் தன்னை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்தான். அன்று அந்தக் கூட்டத்திற்கு அவன் விரும்பி வரவில்லை. அவன் அம்மாவும். நண்பாகளும் நீண்ட நாட்களாக அவனுடைய இரட்சிப்பிற்காக ஜெபித்து வந்தனர். அந்த நாட்களில் தான் இந்த 5 நாள் கூட்டம் நடக்கிறது என்று கேள்விப்பட்டு. அதற்கு எப்படியாவது கூட்டிச் செல்ல வேண்டும் என்று விரும்பி. அவன் நண்பர்கள் அவன் அம்மாவிடம் சென்று அம்மா பில்லியை கூட்டத்திற்கு கூப்பிட்டால் வரமாட்டான். ஆனால் வேன் ஓட்டுவது என்றால் அவனுக்குப் பிடிக்கும். அதனால் டிரைவரை நிறுத்தி விட்டு வேன் ஓட்டுவதற்கு அப்பாவிடம் அனுமதி வாங்கித் தாருங்கள் என்று கேட்டார்கள். அப்பாவும் சரி என்று சொல்லி விட்டார். அந்த இளைஞன் தன் நண்பர்களிடம் மிகவும் கண்டிப்பாக. நான் வேன் ஓட்டிட்டு வர்றேன் ஆனால் அங்கே போனபின் கூட்டத்திற்கு வா என்று என்னை யாரும் கட்டாயப்படுத்தக் கூடாது என்று சொன்னான்.

நண்பர்களும் நீ டிரைவராக மட்டும் வா என்று கூட்டிச் சென்றார்கள். ஆனாலும் அவர்கள் அவனுக்காக ஜெபித்துக் கொண்டேயிருந்தார்கள். அந்தக் கூட்டம் ஒரு பெரிய Tent-குள்ளே தான் நடந்தது. ஒரு நாள் கூட அந்த இளைஞன் அந்தக் கூட்டத்தை எட்டிக்கூட பார்க்கவில்லை. நான்கு நாட்களும் வேனுக்குள்ளேயே இருந்தான். 5-ஆவது நாள் கூட்டம் முடியப்போகிற நேரத்தில் உள்ளேயிருந்த ஒரு அழகான குரலில் பாடல் சத்தம் கேட்டது. பாடுவது யார் என்று பார்க்க அந்த இளைஞன் Tent-குள்ளே நுழைந்தான். பாடல் வரிகள் இவரைப் பற்றியே பாடுவது போல் இருந்தது. பாடுபவரின் கை அசைவுகள் இவரைப் பார்த்துத் தான் அழைப்பது போல் இருந்தது. வெறும் கிறிஸ்தவராக இருந்த அவர். அந்த நேரத்திலே உள்ளத்தில் உணர்த்தப்பட்டு இயேசுவுக்கு தன் இருதயத்தில் இடம் கொடுத்தார். அந்த இளைஞன் தான் பில்லிகிரஹாம். பின்னாட்களில் உலகப்புகழ் பெற்ற சுவிசேஷகராக இலட்சோப இலட்ச மக்களுக்கு சுவிசேஷத்தை அவர் அறிவிக்கும் போது கூட்டம் கூட்டமாய் ஜனங்கள் பாவத் திலிருந்து மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டார்கள். Youth For Christ என்ற ஊழியத்தை நிறைவேற்றி. வல்லமையாய் ஊழியஞ்செய்து சில ஆண்டுகளுக்கு முன் தான் கர்த்தருக்குள் மரித்தார்.

## நியமிக்கப்பட்ட ஓட்டத்தில் ஓடுவோம்

இந்த செய்தியை வாசிக்கின்ற நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? Sunday Class, VBS, Youth Meeting, Prayer என்று கூப்பிடும் போது ஓடி ஒளிந்து கொள்கிறீர்களா? அப்படியே கூட்டத்திற்குப் போனாலும் சும்மாதான் வருவேன். என்னைப் பார்த்து கையை தட்டு. பாட்டுப் பாடுன்னு எல்லாம் சொல்லக் கூடாது என்று Condision போட்டு போகிறீர்களா? சங்கிலித் தொடர் (Relay Race) போல இயேசுவின் இரட்சிப்பைக் கடந்து வந்த எத்தனை பேர் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுபோல நீங்களும் ஆசீர்வதிக்கப்பட்டு. இரட்சிக்கப்பட்டு. உங்கள் மூலம் மற்றவர்களும் ஆசீர்வதிக்கப்பட்டு. இரட்சிக்கப்பட வேண்டுமே! அதற்கு என்ன செய்ய வேண்டும் என்கிறீர்களா? கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும். உன் வீட்டாரும் (நண்பர்கள். நீ சுவிசேஷம் அறிவிக்கும் நபர்கள்) இரட்சிக்கப்படுவீர்கள். அப் 16:31. இயேசு எனக்காக. என் பாவத்தை மன்னிப்பதற்காக இரத்தம் சிந்தி மரித்தார்.

நான் அவர் பிள்ளையாய் வாழ்வதற்காக உயிரோடு எழுந்தார் என்பதை உள்ளத்தில் விசுவாசித்தால் போதும் நீ. நீங்கள் இரட்சிக்கப் படுவீர்கள். இயேசு எனக்குத் தேவை அவரை என் தகப்பனாக ஏற்றுக் கொள்கிறேன் என்று உங்கள் உள்ளத்தில் இடம் கொடுத்தால் போதும் நீங்கள் அவருடைய பிள்ளையாய் மாறி விடுவது மட்டுமல்ல நீங்கள் பெற்ற இயேசுவை அடுத்தவருக்கும் சொல்லத் துவங்குவீர்கள். அப்படிப்பட்ட தொடர் ஓட்டம் தான் நமக்கு நியமிக்கப் பட்டுள்ளது. அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு ஓடுவீர்கள். பெற்றுக் கொள்ளும்படி அநேகரை ஓட வைப்பீர்கள். (1கொரி 9:25)

இயேசுவை பின்பற்றுபவர்களை சிறையில் அடைப்பதும், கொலை செய்வதுமாக இருந்த சவுலை இயேசு சந்தித்த பின்பு தன் பாவங்களை அறிக்கையிட்டு ஞானஸ்நானம் எடுத்து, பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்ட பின் தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களில் பிரசங்கித்தார்.(அப் 9:20). யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் இயேசுவை, இரட்சிப்பை அறிவித்தார். தேவனிடமிருந்து வெளிப்பாடுகளைப் பெற்று 13 நிருபங்களை எழுதினார். தீமோத்தேயு, தீத்து..... போன்ற விசுவாசமுள்ள உத்தம நபர்களுக்குள் தொடர் ஓட்டத்தை துவங்கி வைத்தார். இந்நாள் வரைக்கும் அது தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கிறது. கிறிஸ்துவின் வருகை வரைக்கும் அது நடந்து கொண்டேயிருக்க வேண்டும்.

நீங்கள் சின்ன சின்ன ஊழியங்களைச் செய்து கொண்டிருக்கலாம் சோர்ந்து போகாதிருங்கள். நீங்கள் ஒரு D.L.மூடியையோ அல்லது பில்லிகிரஹாமை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். விடுமுறைக் காலங்களில் அல்லது மற்ற நாட்களில் சுவிசேஷ கூட்டங்களில் பங்கு கொள்ளுங்கள், மற்றவர்களையும் அழைத்துச் செல்லுங்கள். கர்த்தர் தம்முடைய வார்த்தையின் மூலம் பேசி அவர்களை அவருடைய பிள்ளையாய் மாற்றுவார். விரக்தியிலும், வேதனையிலும், சோர்விலும் நீங்கள் இருக்கிறீர்களா? இன்றே இயேசுவிடம் வாருங்கள் அவர் உங்கள் பாரங்களை, கவலைகளை நீக்கி மெய் சமாதானத்தை தருவார். நல்ல ஒரு ஓட்டத்தை உங்களில் துவக்கி அதில் தொடர்ந்து ஓட கிருபையையும், பெலனையும் அளித்து உங்களைத் தாங்குவாராக!.




